செய்தி வெளியீடு எண்:369 நாள் : 10.07.2013

**செய்தி வெளியீடு**

தமிழ்நாட்டில் உள்ள அனைவருக்கும் சுகாதார பாதுகாப்பினை அளித்திடும் வகையில், அரசு மருத்துவமனைகளுக்கு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களை நியமித்தல், எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகளை அளித்தல் போன்ற முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில் 55 ஒருங்கிணைந்த அவசர பேறுகால மற்றும் சிசு பராமரிப்பு நிலையங்களுக்கு வருகை தரும் நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை வழங்கும் பொருட்டும், தாய் சேய் நலம் காக்கும் பொருட்டும், நவீன அறுவை சிகிச்சை உபகரணங்கள், நவீன பிரசவ கட்டில்கள், நிழலில்லா விளக்குகள் மற்றும் ஹெப்பா ஃபில்டர் வசதியுடன் கூடிய நவீன அறுவை சிகிச்சை அரங்கம் போன்ற நவீன மருத்துவ வசதிகள் ஏற்படுத்திட 18 கோடியே 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு தங்கு தடையின்றி உரிய தரமான நவீன மருத்துவ சிகிச்சை வழங்கும் பொருட்டு தேவையான உபகரணங்கள் வாங்கவும், அதற்கென 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, சென்னை கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி, செங்கல்பட்டு, திருநெல்வேலி, மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் 1 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் நவீன எக்ஸ்ரே கருவிகள் வாங்குவதற்கும், சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு 3 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் பல்வேறு நவீன அறுவை சிகிச்சை கருவிகள் வாங்குவதற்கும், சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு 17 லட்சம் ரூபாய் செலவில் லேப்ரோஸ்கோப் கருவிகள் வாங்குவதற்கும் மற்றும் எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 5 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் எம்.ஆர்.ஐ ஸ்கேன் வாங்குவதற்கும் என 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அபாய கட்டத்தில் உள்ள நோயாளிகளை விரைவாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அவர்களின் உயிரைக் காப்பதற்கான பணிக்கு பயன்படுத்தப்படும் அவசரகால ஊர்திகள் நல்ல நிலையில் இருக்கவேண்டும் என்பதால், கழிவு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ள ஊர்திகளுக்கு மாற்றாக புதிய அவசரகால ஊர்திகளை வாங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த வகையில் 116 அவசரகால ஊர்திகளை புதியதாக வாங்குவதற்கும், இதற்கென 15 கோடியே 19 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த உத்தரவுகளின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நவீன மருத்துவ வசதிகள், உபகரணங்கள் மற்றும் அவசர கால ஊர்திகளுக்கு என 43 கோடியே 39 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் :- 10.7.2013.